Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி: எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது பங்குனி 21 ஆம் நாள் துல்கஃதா 19 (3 4 64) வெள்ளிக்கிழமை இதழ் 53

சீடில்ஸ் (யாழ்ப்பாணம்) லிமிடெட்
22, கே. கே. எஸ். வீதி,
உயர்தர றேடியோ விற்பனையாளர்
எந்த வித றேடியோவும்
மிகக்குறைந்த செலவில்
பயிற்சிபெற்ற நிபுணர்களால்
பழுதுபார்த்து கொடுக்கப்படும்.

சாட்சியமளிக்க

# பிரதமர், பீலிக்ஸ் அழைக்கப்பட வேண்டும்

## காங்கேசன் துறைமுகம் ஊடாக தேயிலை ஏற்றுமதி?

காங்கேசன்துறை, வியாழன்

காங்கேசன்துறையிலிருந்து கப்பல் மூலம் தேயிலையை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு இலங்கை ஏற்றுமதியாளர்கள் நடவடிக்கை எடுத்துவருகிறார்கள். இதுசம்பந்தமாக திருக்கோணமலை தேயிலை பரிபாலன ஸ்தாபனத்தைச் சேர்ந்த அதிகாரி, தோட்டத்துரை, புகையிரதப் பகுதி அதிகாரி ஆகியோர் இப்பகுதி தரகர்கள் சிலருடன் காங்கேசன் துறைமுகத்தைப் பார்வையிட்டுள்ளனர்.

இத் துறைமுகத்துக்கு புகையிரத வண்டிப் போக்குவரத்து இருப்பதனால் தேயிலைப் பெட்டிகளை ரயில் மூலமாகக் கொழும்பிலிருந்து இங்கு கொண்டுவந்து வெளிநாடுகளுக்கு கப்பல் மூலம் ஏற்றுமதியைச் சுலபமாகச் செய்யலாமென அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் துறைமுகத்தில் காலாகாலத்தில் உணவுப் பொருள்களை ஏற்றிவரும் கப்பலிலிருந்து இறக்குமதி வேலை செய்வதற்காக காத்திருக்கும் சுமார் ஆயிரம் துறைமுகத் தொழிலாளர்களுக்கு இத் துறைமுகத்தினூடாக ஏற்றுமதிசெய்யவரும் கப்பலிலும் வேலைவாய்ப்புக் கிடைக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு, திருகோணமலை ஆகிய துறைமுகங்களில், ஏற்றுமதி விஷயத்தில் சமீபகாலமாக ஏற்பட்டுள்ள காலதாமதம் காரணமாகவே இவ்விதம் காங்கேசன் துறைமுகத்தால் தேயிலை அனுப்ப யோசனை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## ஒழுங்கு நடவடிக்கை?

கொழும்பு, வியாழன்

இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கு எதிராக பகிரங்கமான முறையில் அறிக்கைகளை வெளியிடும் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கையெடுக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

இடதுசாரி ஐக்கிய முன்னணியின் மத்திய இணைப்புக் கமிட்டியினால் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு, இவ்வார முற்பகுதியில் திரு. எட்மண்ட் சமரக்கொடி பகிரங்கமான முறையில் கண்டனம் தெரிவித்திருந்தார்.

## ஹஜ்யாத்திரிகர்

கொழும்பு, வியாழன்

சுமார் 136 ஹஜ்யாத்திரிகர்கள் நேற்று மக்காவுக்கு புறப்பட்டனர்.

## பெண் உட்பட மூவர் இன்று பாக்குநீரிணையை நீந்துவர்

யாழ்ப்பாணம், வெள்ளி

பாக்குநீரிணையை நீந்திக் கடக்கும் முயற்சியில் ஒரு பெண் உட்பட மூவர் இன்று காலை ஈடுபடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையிலிருந்து பாக்குநீரிணையை நீந்திக் கடக்கும் முயற்சி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் எனவும், நீந்திக் கடக்கும் முயற்சியில் திருமதி அசிலின் டயஸ், திருவாளர்கள் மொறிஸ் மார்க், ஜோர்ஜ் வன்னியப்பா ஆகிய மூவரும் ஈடுபடுவார்களெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இம் மூவரும் பாக்குநீரிணையை நீந்திக்கடக்குமுகமாக யாழ்ப்பாணம் வந்துசேர்ந்துள்ளனர். இவர்களுக்கு கொழும்பிலுள்ள இந்திய அரசாங்கப் பிரதிநிதி அனுமதி வழங்கியுள்ளார்.

நாட்டில் இன, மத வேறுபாடுகள் தலைதூக்கியுள்ள இச் சமயத்தில் இத்தகைய முயற்சி வரவேற்கத்தக்கதென பொது மக்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். நீச்சல் வீரர்கள் மு. நவரத்தினசாமி, வி. எஸ். ஆனந்தன் ஆகியோர் ஏற்கனவே பாக்குநீரிணையை நீந்திக் கடந்திருப்பது தெரிந்ததே.

## பண்டாரநாயக்கா கொலை
## விசாரணைக் கமிஷன்முன் சிட்னி கோரிக்கை

கொழும்பு, வியாழன்

பண்டாரநாயகா கொலை விசாரணைக் கமிஷன் முன்பு இன்று சாட்சியமளித்த முன்னாள் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. சிட்னி டி' சொய்சா விசாரணைக் கமிஷன் முன் பிரதமர் சிறிமா, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, முன்னாள் நீதிமந்திரி வலண்டைன் ஜெயவிக்கிரமா, முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர்ஜெனரல் எம். டபிள்யு. எப். அபயகூன் தற்போதைய பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் எஸ். ஏ. திஸநாயகா உட்படதம்முடன் பொலிஸ்இலாகாவில் கடமையாற்றிய தமது சக உத்தியோகஸ்தர்களும் தமக்குக் கீழ் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் அழைக்கப்பட வேண்டுமென்றும் விசாரணையின்போது தமது கட்சியை எடுத்துக்கூற இவர்களது சாட்சியம் அவசியமென்றும் தெரிவித்தார்.

சதிவழக்கு விசாரணை முடியும் வரை தமக்கு அவகாசம் தரப்பட வேண்டுமென திரு. சிட்னி கமிஷன் தலைவரைக் கேட்டுக்கொண்டார். இதற்கு கமிஷன் தலைவர் ஒப்புக்கொண்டார்.

விசாரணை ஆரம்பத்தின்போது விசாரணைக் கமிஷனின் தலைவரான நீதியரசர் திரு. பெர்னாண்டோ, சதிவழக்கு விசாரணை இப்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் திரு. சிட்னி விசாரிக்கபபடலாமென கமிஷனர்கள் கருதுவதாகத் தெரிவித்தார்.

இதற்கு திரு. சிட்னி பதிலளிக்கையில் தாம் மிகவும் அபாயகரமான முடிவை ஏற்படுத்துக்கூடிய ஒரு விசாரணையை எதிர்நோக்கியுள்ளதாகக் கூறினார். ஒரே சமயத்தில் இரு விசாரணைகளில் சாட்சியமளிக்கும்படி தாம் கோரப்படுவது நீதியாக இருக்கமாட்டாது என்றும் அவர் எடுத்துக் கூறினார். இந்த சமயத்தில் கமிஷன் முன் தாம் சாட்சியமளிப்பது மற்ற எதிரிகள் மனதில் தப்பெண்ணத்தைத் தோற்றுவிப்பதாக இருக்குமென்றும் அவர் தெரிவித்தார்.

## தேசிய சுவீப் முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

தேசிய சுவீப் சீட்டிழுப்பு நேற்று யாழ்ப்பாணம் திறந்த வெளி அரங்கில் இழுக்கப்பட்டது. பரிசு பெறும் டிக்கெட்டுகள் வருமாறு:-

முதற் பரிசு
13 F 0501 ரூபா 50,000
இரண்டாம் பரிசு
18 V 0910 ரூபா 16,000
மூன்றும் பரிசு
19 B 0576 ரூபா 7,750

(6-ம் பக்கம் பார்க்க)

## ஆசிரியருக்கு மீண்டும் பதவி

யாழ்ப்பாணம், வெள்ளி

தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. எம். கார்த்திகேசு நேற்று முன் தினம் முதல் மீண்டும் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளார்.

திரு. கார்த்திகேசு மீது எவ்வித குற்றச்சாட்டும் தாக்கல் செய்யப்படவில்லை எனத் தெரிகிறது.

## 'அரசியலில் தலையிட பிக்குகளுக்கு உரிமைகிடையாது'
## மல்வத்தை மகாநாயக்க தேரோ கருத்து

கொழும்பு, வியாழன்

அரசியல் துறையில் பிக்குகள் ஈடுபடுவதை மல்வத்தை மகாநாயக்க தேரோ வன்மையாகக் கண்டித்துள்ளார்.

ஹேவகெட்ட தொகுதியிலுள்ள ஞாயிறு பாடசாலையில் நடைபெற்ற கூட்டமொன்றுக்குத் தலைமைவகித்த மல்வத்தை மகாநாயக்க தேரோ, "அரசியலில் பிக்குகள்" பற்றிக் குறிப்பிடுகையில், எந்தச் சந்தர்ப்பத்திலும் பிக்குகள் அரசியலில் ஈடுபடுவது தவிர்க்கப்படவேண்டுமென்று தெரிவித்துள்ளார்.

அரசியலில் தலையிடவோ அல்லது பார்லிமெண்ட், ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் போட்டியிடவோ பிக்குகளுக்கு உரிமைகிடையாது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"மக்களுக்கு தர்மத்தைப் போதிப்பதையே பிக்குகள் தங்கள் கடமையாகக் கருத வேண்டும். மக்கள் உண்மையுள்ள பௌத்தர்களாக வாழ அவர்களுக்கு பிக்குகள் வழிகாட்டவேண்டும்" என்றும் மகாநாயக்க தேரோ கூறினார்.

## 'கைதிகளுக்கு சிற்றுண்டி விடுதி'

கொழும்பு, வியாழன்

கைதிகளுக்கு சிற்றுண்டி விடுதி சலுகைகள் அளிக்கப்படவேண்டுமென்று உள்நாட்டு மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியாவுக்கு சிறைச்சாலை கமிஷனர் சிபார்சு செய்துள்ளார்.

சிற்றுண்டிச் சலுகைகள் அளிப்பதன் மூலம், சிறைக் கைதிகள் தங்களுக்குக் கிடைக்கும் வருமானங்களைக்கொண்டு தமக்குத் தேவையானவற்றை வாங்கிக்கொள்ளமுடியுமென்றும் கைதிகளுக்கு, புத்தகங்கள், சஞ்சிகைகள், செய்திப் பத்திரிகைகள் கிடைக்கவும் ஒழுங்குகள் செய்யவேண்டுமென்றும் தமது மகஜரில் சிறைச்சாலை கமிஷனர் தெரிவித்துள்ளார்.

---

யாழ்ப்பாணம், வியாழன்

தீவுப்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜத்தின் புங்குடுதீவுக் கிளை ஸ்தாபனத்தின் புதிய கட்டிடத்திறப்புவிழா எதிர்வரும்சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. சமாஜத் தலைவர் திரு ப. கதிரவேலு புதிய கட்டிடத்தைத் திறந்து வைப்பார்.

### மணிவாக்கு

பழிக்குப் பழிவாங்குவது ஓர் அற்ப காரியம். ஆனால் பிறர் செய்த குற்றத்தை மன்னிப்பது மகத்தானதும் கஷ்டமானதுமான செயலாகும்.

— இரீன் லோர்

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணமசேர்பகிருதுஆண்டு
பங்குனி மீ 21 உ. (3-4-64)

## 'நாடற்றவர்' பிரச்னை

ஒரு குடும்பத்துக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் உதவிப்பணம் கொடுத்து இலங்கையிலுள்ள "நாடற்ற" இந்திய வம்சாவளியினரை வெளியேற 'தூண்டுதல்' அளிக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக ஒருசெய்தி கூறுகிறது. நிர்ப்பந்தத்தின்மூலமும் பலாத்கார நடவடிக்கை மூலமும் வெளியேற்ருமல் பணம் கொடுத்து 'தூண்டுவது' மூலம் அவர்கள் தாமாகவே வெளியேறச் செய்வது வரவேற்கத் தக்கது.

என்ருலும் நாட்டின் நிதி நிலைமை மோசமடைந்துள்ள இச்சமயத்தில் பெருந்தொகையான பணத்தை இந்தத்தூண்டுதல் திட்டத்திற்குச் செலவிடுவதும் நாட்டின் உற்பத்தியைப் பெருக்க வேண்டிய இந்நேரத்தில் உழைப்புப்பலம் நிறைந்த மக்களை வெளியேற்றுவதும் நல்லதாவென்பது சிந்திக்க வேண்டிய விஷயம்.

வேலையில்லாத் திண்டாட்டம், உணவு, உடைத்தட்டுப்பாடு. மொழி, குடியுரிமை மறுப்பு, சட்டவிரோதக் குடியேற்ற நடவடிக்கை என்ற போர்வையில் நடைபெறும் பொலிசாரின் கெடுபிடிச் செயல் ஆகியவற்ருல் தோட்டப்பகுதிகளிலுள்ள மக்களில் பலர் இந்தியாவுக்குச் செல்ல விரும்பக்கூடும். ஆனாலும் இலங்கையைத் தவிர வேறு எந்த நாட்டின் மண்ணையும் மிதித்தறியாத மலைநாட்டுத் தமிழ் தொழிலாளர்களை பணத்தைக்காட்டி ஆசையூட்டி வெளியேற்றி அனுப்புவது கண்ணைக் கட்டிக் காட்டில் விடுவது போலாகும். இது மனிதர் சம்பந்தப்பட்ட பிரச்னையாதலால் இதை மனிதாபிமானத்துடன் கவனிக்க வேண்டியது அவசியம்.

'தூண்டுதல்' திட்டம் நேரு-கொத்தலாவல ஒப்பந்தத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அம்சமாகையால் இந்திய அரசாங்கமும் இதை ஆட்சேபிக்க இடமில்லை. இதற்கு மாருக இலங்கையிலிருந்துவரும் இந்திய வம்சாவளியினரை 'அகதி'களாகக் கருதி அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க ஆவனசெய்ய வேண்டியது இந்திய அரசாங்கத்தினதும் குறிப்பாகத் தமிழ்நாட்டு அரசாங்கத்தினதும் முக்கிய கடமையாகும். ஏற்கனவே பாகிஸ்தான், திபெத் அகதிகள் பிரச்னை இந்திய அரசாங்கத்துக்குப்பெரும் சுமையாக உள்ளது உண்மைதான். என்ருலும் இலங்கையிலிருந்து வருபவர்கள் சிறிது பணத்துடன் வந்தாலும் அவர்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள அது ஓரளவும் போதியதாக இருக்காதென்பது தெளிவாகையால் அவர்களுக்கு இந்திய அரசாங்கமும் புனர்வாழ்வளிக்க ஆவன செய்ய வேண்டும்.

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரின் முன்னோர்களை இலங்கைக்கு அழைத்து வந்தவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள். இந்திய வம்சாவளியினரின் உழைப்பை இன்றும் பலவிதங்களிலும் பிரிட்டிஷார் அனுபவித்து வருகின்றனர். எனவே இந்திய வம்சாவளியினர் விஷயத்தில் பிரிட்டிஷாருக்கும் பொறுப்பு உண்டு. இந்தப் பிரச்னையில் அவர்கள் தலையிடாவிட்டாலும் 'தூண்டுதல்' மூலம் நாட்டை விட்டு வெளியேறும் மக்களுக்கு புனர்வாழ்வளிப்பதிலாவது பிட்டிஷார் உதவி செய்யக் கடமைப்பட்டவர்.

இவ்வித 'தூண்டுதல்' அளித்தும் இந்நாட்டை விட்டுச் செல்ல விரும்பாத 'நாடற்றவர்' பலர் இருக்கலாம். அவர்கள் விஷயம் என்ன? அவர்களையெல்லாம் இலங்கைப் பிரஜையாக ஒப்புக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இன்றேல் இந்த 'நாடற்றவர்' பிரச்னை தீருவதற்குப் பதில் வளர்ந்து கொண்டே போகும். நாம் ஏற்கெனவே இப்பத்திகளில் கூறியதுபோல், மனிதர்களைப் பற்றிய இப்பிரச்னையை மனிதாபிமானத்துடன் தீர்ப்பதில் இலங்கை, இந்தியா இவ்விரு நாடுகள் மட்டுமன்றி, பிரிட்டனும் ஒத்துழைத்தாலே இது சுமூகமாகத் தீர முடியும்.

---

### திருக்கேதீச்சர அலங்கார உற்சவம்

திருக்கேதீஸவரம் புதன்

திருக்கேதீச்சர ஆலய அலங்கார உற்சவம் இம்மாதம் பத்தாம் திகதி ஆரம்பமாகி 5 தினங்கள் தொடர்ந்து நடைபெறவிருக்கின்றது. அலங்கார உற்சவம் விசேஷ நவகலசஸ்நபன அபிஷேக பூஜை ஆராதனைகளுடன் ஆரம்பமாகுமெனவும், கோணேசப் பெருமானின் 'பாபநாசத்' தீர்த்தத்தை சைவ அடியார்கள் பக்தி பூர்வமான ஆராதனைகளுடன் திருக்கேதீச்சரத்திற்கு கொண்டு வந்து கௌரி நாயகி சமேத கேதீச்சர நாதருக்கு அபிஷேகம் செய்விப்பார்களெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

### பாடசாலை பெயர் மாற்றம்

கோப்பாய், புதன்

ஐம்பது வருடங்களாக ஒரே பெயரில் இயங்கி வந்த ஒரு பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றபின் பெயர் மாற்றம் பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

கோப்பாயில் 1910-ம் ஆண்டில் நிறுவப்பட்ட சரஸ்வதி பெண்கள் பாடசாலையையும், நாவலரால் நிறுவப்பட்ட நாவலர் ஆண்கள் பாடசாலையையும்ஒன்றுசேர்த்து கோப்பாய் இந்துதமிழ்க்கலவன்பாடசாலை எனப் பதிவு செய்யப்பட்டது.

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்குமுன் இப்பெயர் வழங்கப்பட்டு வந்தது. பாடசாலைகள் பொறுப்பேற்கப்பட்டபின் மேற்படி பாடசாலை கோப்பாய் நாவலர் தமிழ்க் கலவன் பாடசாலை என வழங்கப்பட்டது. இதுசம்பந்தமாக கோப்பாய் எம். பி திரு. மு. பாலசுந்தரம் வித்தியாதிபதிக்குச் செய்துகொண்ட புகாரைத் தொடர்ந்து பழைய பெயரில் பாடசாலையை அழைக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# திருக்கோணேஸ்வரம் பற்றி ஆராயவேண்டும்

## கோணேசர்மலையையும் புனித இடமாக பிரகடனப்படுத்த வேண்டும்

— க. சு. சித்திரவேல் —

(தலைவர், கோணேசர்கோயில் நிர்வாகசபை)

(நேற்றைய தொடர்ச்சி)

திருக்கோணேஸ்வரம் ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்த காலை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாதிருந்த புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவினர், இன்றும் அவ்வாறு இருப்பது வருந்தத்தக்கதாகும். இன்றிருக்கும் விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்ட இடங்களில், மேற்படி இலாகாவினர் எவ்வித ஆராய்ச்சியும் நடத்தியதாகத் தெரியவில்லை. காலதாமதமின்றி இவ்விடங்களில் அகழ்வாராய்ச்சிகள் செய்து கோயில்கள், பாவநாசச்சுனை ஆகியன அமைந்திருந்த இடங்களை மக்களுக்கு அறியத்தர வேண்டியது அவர்கள் கடனாகும்.

போத்துக்கேயருக்குப் பயந்து விக்கிரகங்களையும், களஞ்சியங்களையும் மூன்றுகாததொலைவிலுள்ள களனிமலையில் ஒளித்து வைக்கப்பட்டதாக அறியக்கிடக்கின்றது. இக்கழனிமலைஎதுவென்பது ஆராய்ச்சிக்குஉரிய பொருளாகிவிட்டது.

### புனித நகராக்குக!

வெள்ளை நிறத்தவர்களின் ஆதிக்கத்திற்கு முன்னர், கடலுடன் சூழ்ந்து கோயிலும், சுனையும், மலையும், சைவப்பெருமக்களின் புனித உடமையாக இருந்திருக்கின்றன. சிவநெறிவழுவாச் சிந்தையரான தொழும்பார் அங்கு வாழ்ந்திருந்தனர். பௌத்த ஆலயங்களை அண்டியுள்ள பிரதேசங்கள் புனித நகராகப் பிரகடனம் செய்ததுபோல், கோணேசப் பெருமான் கோயில்கொண்டருளும் கோணேசர் மலையையும் புனித நகராகப் பிரகடனம் செய்து ஈழம்வாழ் சைவப் பெருமக்களை மகிழ்விப்பது அரசினர் கடமையாகும்.

இடவசதியின்மையால், வெள்ளை ஆதிக்கத்தினர் விட்டுச் சென்ற கட்டிடங்களில் இயங்கும் அரசாங்க அலுவலகங்கள்; புதிய கட்டிடங்கள் நிர்மாணிக்கும்வரை திருக்கோணேஸ்வர ஆலயபரிபாலன சபைக்கு சிறுவாடகை அறித்து அங்கு பணியாற்ற ஒழுங்குகள் செய்யலாம். கண்ணொளி பெற்ற கஜபாகு மன்னன், சோணப்பபண்டாரம் ஆகிய சிங்கள வம்சத்தினர் இவ்வாலயத்திற்கு நிதியளித்து திருப்பணி செய்ய இன்றில்லையெனினும், திருக்கோணேசர் மலையைப் புனித நகராகப் பிரகடனம் செய்வதின் மூலம் அக்கைங்கரியத்தை இவ்வரசாங்கம் நிறைவேற்றலாம்.

நீர் பாம் பள்ள வெளிச்யு, செந்நெற் களனிகளால் செல்வம் கொழித்த இவ்வாலயம் காலவெள்ளத்தில் ஏற்பட்ட சிதைவால் இவ்வாலயத்தின் சொத்துக்களைப் பிறிதொரு கோயில் அனுபவித்து வருவதை மக்கள் நன்கு அறிவர்.

### மானினங்கள்

கோணேஸ்வரத்தின் இயற்கை எழிலுக்கு அங்கு செழித்துச் செறிந்திருந்த மௌவல், மாதவி, புன்னை, வேங்கை, செருந்தி, செண்பகம், குருந்து, முல்லை ஆகிய தவரவர்க்கங்களோடு கலையும், பிணையுமாய் அணியணியாய் அழகுதந்த மானினங்களும் காரணமாய் அமைந்தன. கால வெள்ளத்தில் தாவரங்கள் பல அழிந்து மறைந்தன. இன்றிருப்பவற்றையேனும் காப்பாற்றல் நம் கடனாகும். உணவுப்பஞ்சத்தால் மான்கள் கோணேசர் மலையை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கின்றன. நகர்ப்புறங்களில் உணவு தேடி அவைகள் அலைவதை நாம் காணமுடிகின்றது. உணவு தேடி அலையும் அப்பிராணிகள் உணவாக்கப்படும் செய்திகள் நம்மை வருத்தாமலில்லை.

வனவிலங்கு பாதுகாப்புச் சபையினர் இப்பிராணிகளுக்கு காலத்திற்குக் காலம் உணவளிக்க வல்ல தாவரங்களை கோணேசர் மலையில் உண்டாக்க உதவியளிக்கவேண்டும். மான்கள் கோட்டை வாயிலைத் தாண்டா வண்ணம் வாயிலில் தண்டவாள இரும்புகள் அமைத்துத்தர வேண்டும்என இம்மாவட்ட அரசாங்க அதிரை வேண்டுகின்றேன்.

---

### மாட்டுவண்டி சவாரிப் போட்டி

தெல்லிப்பழை, வியா.

காங்கேசன்துறை கூத்தியவத்தை திறந்தவெளி அரங்கில்புதுவருடப் பிறப்புக்குமுன் தினம் பெரிய அளவில்மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியை நடத்த பட்டினசபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் ஏற்பாடுகள் செய்துள்ளார். பழைய வாலிபர் சங்க அனுசரணையுடன் இப்போட்டி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒற்றை மாட்டுவண்டி, இரட்டை மாட்டுவண்டி, சைக்கிளோட்டப் போட்டிகளை விரிவான அடிப்படையில் புதுவருடப் பிறப்பன்று மாலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்து விட்டதாக பட்டினசபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் அறிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கூத்தியவத்தை திறந்தவெளி அரங்கில் சவாரிப்போட்டிகளை நடத்த பழைய வாலிபர் சங்கம் ஏற்பாடுகள் செய்திருந்தாயினும் போட்டி நடைபெறும் சமயம் போட்டியாளர்கள் நிர்வாகிகளின் உத்தரவுக்குப் பணிய மறுத்ததைத் தொடர்ந்து சவாரிப் போட்டி ரத்துச் செய்யப்பட்டது.

சவாரிப் போட்டியைக்காண வந்து ஏமாற்றமடைந்த பெருந்தொகையான மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் சவாரிப் போட்டியை நடத்த பட்டினசபைத் தலைவர் ஏற்பாடுகள் செய்துள்ளார்.

போட்டியிற் கலந்துகொள்ள விரும்புபவர்களிடமிருந்து 13-ந் திகதி காலை வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமெனவும் போட்டியாளர்கள் நிர்வாகிகளின் உத்தரவுக்குப் பணியவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

கம்பளை, வியாழன்

சர்வாதிகார அரசாங்கமொன்றை அமைக்கும் முயற்சியைத் தடுக்கும்படி பிரதமரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று கம்பளை நகரசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

---

### ஐயாறன் எழுதுவது

இலங்கையிலே அரசாங்க டாக்குத்தர்மார்களின் சம்பளம், தென்கிழக்கு ஆசியாவிலேயே மற்ற நாடுகளிலுள்ளதைவிட அதிகமென்று இங்கு வந்துள்ள உலக சுகாதார ஸ்தாபன நிபுணர் தெரிவிக்கிருர்

இந்தியா, பாகிஸ்தான், பர்மா இந்நாடுகளிலே உள்ள டாக்டர்களின் சம்பளத்திட்டம், தொழில் வாய்ப்பு முதலியவற்றுடன் ஒப்பிடும்போது இலங்கையிலே அதே தகுதியுள்ள டாக்டர்மார்கள் அதிக சம்பளமும், சலுகைகளும் பெறுகிருர்கள் என்று அந்த நிபுணரின் அறிக்கை கூறுகின்றது.

இதைக் கேட்டதும் நமது அரசாங்க டாக்டர்கள் என்ன கூறுவார்களோ! அல்லது இந்தியா முதலிய நாடுகளிலுள்ள டாக்டர்மார்கள் இலங்கை சமாச்சாரத்தை அறிந்ததும், இலங்கையைப் போல சலுகை வேண்டும் என்று 'ஸ்டிரைக்' செய்வார்களோ என்னவோ!

* * *

டாக்டர்கள் வேதனம் மட்டுமல்ல. அரசாங்க அதிகாரிகள், ஆசிரியர்கள் முதலியோரின் சம்பள விகிதங்களை இந்தியாவிலுள்ளதுடன் ஒப்பிட்டால், இங்குள்ளவர்கள் எவ்வளவோ அதிர்ஷடசாலிகள் என்று தெரியவரும்.

ஆனல் கானு, நைஜீரியா முதலிய நாடுகளிலே சம்பள விகிதங்கள் அதிகம் என்று இலங்கையிலிருந்து அங்கு பலர் சென்றுள்ளனர். பிரிட்டனிலும் சம்பள விகிதங்கள் இங்குள்ளதுடன் ஒப்பிடுகையில் அதிகமே. அதனுல் பல இலங்கை வாலிபர், பிரிட்டனில் தொழில் செய்து குடியேறிச் செல்கின்றனர். பிரிட்டனைவிட அமெரிக்காவில் அதிக சம்பளமாம்! அதனுல் விஞ்ஞான தொழில்நுட்ப வல்லுனர் பலர் பிரிட்டனிலிருந்து அமெரிக்காவுக்கு அதிகமாகச் செல்லுவதாக ஒரு செய்தி மூலம் அறியலானேன்!

சம்பளம் அதிகமாகப் பெறுவதால், சில வசதிகள் அதிகமாகக் கிடைக்கலாம். ஆனல் உண்மை இன்பம், பணத்தைவிட அன்புச் சேவையில்தானே அதிகம் தங்கியுள்ளது!

இப்போது பங்குனி மாதம். கடும் கோடை. காலை 9 மணிக்கு மேல் மாலை 5 மணி வரை வெயிலும் புழுக்கமும் தாங்கவில்லை. தாகம், தாகம். இரவிலும்கூட வாயுபகவான் வருவதில்லை. போர்த்துக் கொள்ளாமல் படுத்தால் கொசுக்கள் படையெடுத்து வந்து கடித்து இரத்தத்தை உறிஞ்சுகின்றன. இந்த உபத்திரவத்தில் பலருக்குத் தூக்கம் கிடையாது. அதிகாலையில் தான் சற்றே குளிர். அப்போது தான் தூக்கம் வருகிறது.

* * *

இக்காலத்தில் மட்டுமல்ல முன் காலத்திலும் கூட பங்குனி, சித்திரை இப்படித்தான்.

"பங்குனி மாதத்தில் பகல் வெளி நடப்பவரைப் பார்ப்பவர்கள் படும்பாட்டைப் படுவேனுகவும்..." என்று பத்திரங்களில் உறுதிமொழி வாசகங்கள் எழுதுவது வழக்கமாம். பார்ப்பவர்கள்பாடே அப்படி இருக்குமாயின் வெளியில் நடப்பவரின் தவிப்பு எப்படி இருக்கும்.

இந்தியாவிலே பலஊர்களில் கடை வீதிகளில் வர்த்தகரெல்லாம் சேர்ந்து கோடைப் பந்தல் போடுவர். தண்ணீர்ப் பந்தல் தர்மம் கோடை காலமெல்லாம் நடக்கும். வசிப்பளுவு அதிகமுள்ள இக்காலத்தில் கூட இந்த தர்மம் அங்கு நடந்துகொண்டிருக்கின்றது.

இங்கும் இவ்வித தர்மங்கள் சில இடங்களில் திருவிழாக் காலத்தில் நடக்கின்றன. திரு

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

விழாவின்போது மட்டுமன்றி கோடைகாலமெல்லாம் ஆங்காங்கே தண்ணீர்ப் பந்தல் முதலிய தர்மங்கள் நடப்பின் அது தமிழ்ப்பண்பு வளரவும் தமிழ்ச் சாதி வாழவும் வழிசெய்யும்.

* * *

கன்னெடுங்காலம் வெதும்பிக் கருங்கடல் நீர்சுருங்கிப்,
பன்னெடுங்காலம் மழைதான் மறுக்கினும் பஞ்சமுண்டென்,
றென்னெடுஞ் சூளறும் அஞ்சல் நெஞ்சே
இமையாத முக்கண், பொன்னெடுங் குன்றமொன்றுண்டு
கண்டீர் இப்புகலிடத்தே.

— திருநாவுக்கரசர்

# "துருக்கிய துருப்புக்களை வாபஸ் பெற முடியாது"

## சைப்ரஸ் அதிபர் கோரிக்கைக்கு பிரதமர் இனேனு நிராகரிப்பு

அங்காரா, ஏப். 2

சைப்பிரஸிலுள்ள துருக்கியத் துருப்புக்கள் தங்கள் பாசறைகளுக்குத் திரும்பிச் செல்லவேண்டும் என அதிபர் மக்காரியோஸ் விடுத்த கோரிக்கையை, துருக்கிப் பிரதமர் திரு. இஸ்மத் இனேனு நிராகரித்துவிட்டார்.

ஒப்பந்தப்படியே துருக்கியத் துருப்புக்கள் அங்கு இருப்பதாயும் சைப்ரஸில் ஒழுங்கு ஏற்பட்ட பின்பே அப்படி செய்ய முடியும் என்றும் திரு. இனேனு கூறினர்.

சைப்ரஸில் அமைதியைப் பாதுகாக்க ஐ. நா. துருப்புக்கள் வந்திருப்பதால் கிரேக்கத் துருப்புக்களும், துருக்கியத் துருப்புக்களும் பாசறைகளுக்குத் திரும்பவேண்டும் என்றும், பிரிட்டிஷ் துருப்புக்கள் கணிசமான அளவு குறைக்கப்பட வேண்டுமென்றும் அதிபர் மக்காரியோஸ் முன்பு கோரியிருந்தார்.

இதற்கிடையில் ஐ. நா. துருப்புக்கள் பூரண சுதந்திரத்துடன் செயலாற்றுமெனவும், அவசியமானுல் சைப்ரஸ் அரசாங்கத் துருப்புக்களின் உதவியை அது கோரும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

# பிரேஸில் அதிபர் ராஜினமா செய்தார்?

## ராணுவ எழுச்சியை தொடர்ந்து நடவடிக்கை

ரியொடிஜெனிரோ, ஏப்ரல் 2

பிரேஸில் அதிபர் திரு. கௌலாக் ராஜினமாச் செய்துவிட்டதாயும், தலைநகரிலிருந்து அவர் புறப்பட்டுச் சென்றுவிட்டதாயும் ஊர்ஜிதமற்ற செய்திகள் கூறுகின்றன.

பிரேஸிலின் 4 ராணுவ அணிகளில் இரண்டு அணிகள் பகிரங்க கலகத்தில் ஈடுபட்டிருப்பதாய்க் கூறப்படுகிறது. மொத்தமுள்ள 22 ராஜ்யங்களில் 10 ராஜ்யங்கள் இந்தக் கலகத்திற்கு ஆதரவளிப்பதாயும் கூறப்படுகிறது.

தலைநகரமான ரியோடிஜெனிரோ இன்னும் அதிபருக்கு விஸ்வாசமான படைகளிடமே இருப்பதாய்க் கூறப்படுகிறது.

## பாதுகாப்புச் சபை

நியூயோர்க், ஏப். 2

பிரிட்டன் வலுத்தாக்குதல் நடத்தியதாக ஏமன் கூறியுள்ள புகாரை ஆராயுமுகமாக ஐ நா. பாதுகாப்பு சபை இன்று கூடியது.

பிரிட்டனின் செயல் பிரதிகூலமான பலனைத் தோற்றுவிக்கும் என வாஷிங்டனில் கருதப்படுவதாகக் கூறப்படுகிறது.

## டாக்ஸி திருட்டு வழக்கு

கொழும்பு, வியாழன்

16,000 ரூபா பெறுமதியான ஒரு டாக்ஸியை சாவியுடன் நிறுத்திவிட்டு சாரதி சாப்பிடச் சென்றார். திரும்பிவந்தபோது அது காணப்படவில்லை. மருதானை டார்லி வீதியில் ஓரிரவு நடைபெற்ற இச் சம்பவம்பற்றிய வழக்கு கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் முன் விசாரணைக்கு வந்தது.

குற்றஞ்சாட்டப்பட்ட இரு எதிரிகள் தாங்கள் குற்றவாளிகளல்ல எனக் கூறினர். அடுத்த விசாரணை ஏப்ரல் 28-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# மன்னரின் தம்பிக்கு 65 இளவரசர்கள் ஆதரவு

## அராபிய அரண்மனை போராட்டத்தின் முடிவு

அம்மான், ஏப்ரல் 2

சாவூத் மன்னரின் அரசியல் சட்ட அதிகாரத்தை சாவூதி அராபியப் பிரதமரான இளவரசர் பைஸலிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற இஸ்லாமிய குருபீடத்தின் முடிவை சாவூதி அரச குடும்பத்தைச் சேர்ந்த 65 இளவரசர்கள் ஆதரித்து அறிக்கை விட்டிருப்பதாய் மெக்கா ரேடியோ கூறியது.

குருபீடத்தின் முடிவுகள் பின்வருமாறு:

"சாவூத் மன்னர் நாட்டின் மதிப்பிற்கும், வணக்கத்திற்குமுரிய அரசராய் இருந்து வர வேண்டும்.

மன்னரின் முன்னிலையில் சகல உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களையும் பைஸல் இளவரசர் கையாள வேண்டும். மன்னர் இல்லாவிட்டால், அவருடன் ஆலோசிக்காமலேசெயலாற்றவேண்டும்."

சவூதி அரேபியாவின் முப்தியான ஷேக் மொகமத் பென் இப்ராஹிம் தலைமையில் 13 குருமார்கள் இந்த முடிவில் கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

மன்னருக்கும் அவரது சகோதரர் பைஸல் இளவரசருக்குமிடையே நிலவிய அபிப்பிராய பேதத்தை ஆராய்ந்த பின் குருபீடத் தலைவர்கள் இந்த முடிவை வெளியிட்டனர்.

மன்னரின் ஆரோக்கியம் ராஜீய விஷயங்களைக் கவனிக்கும நிலையில் இல்லாதிருப்பதும் இதற்குக் காரணம்.

# "சீன - ரஷ்ய பிளவு மேற்கு நாடுகளுக்கு ஆபத்து"

—டெயிலி மெயில்

## வெள்ளையர் - கறுப்பர் மோதலுக்கு வழி செய்யுமாம்

லண்டன், ஏப்ரல் 2

ரஷ்யாவுக்கும் சீனவுக்குமிடையேயான பிளவு நீண்ட கால அடிப்படையில் மேற்கு நாடுகளுக்குத் தீமையையே விளைவிக்கும் என "டெய்லி மெயில்" பத்திரிகை கூறுகிறது.

ரஷ்யாவுடன் சீன நேச உறவுக்கு வர சாத்தியமான முயற்சிகளும் செய்யப்பட வேண்டும். கம்யூனிஸ்ட்பிளவும், ரஷ்யா மேற்குநாடுகள் பக்கம் நெருங்கி வருவதும் சர்வதேச நிலையில் ஒரு பாரதூரமான முக்கியத்துவத்தை உண்டுபண்ணும் என்றும் இப்பத்திரிகை கூறியிருக்கிறது.

இந்த நிலைமை வெள்ளையர்களுக்கெதிராக சீனர்கள் நிறமக்களை அணிவகுக்க வழி செய்யுமா? எனினும் இந்தியா சீனவுக்கெதிராக ஆயுதம் பூண்டுவருகிறது. கம்யூனிஸ்ட் பிளவு நமக்கு நன்மையை விளைவிக்குமா? சிலகாலத்திற்கு நன்மையை உண்டுபண்ணலாம். ஆனல் நீண்டகாலத்திற்கல்ல. மனிதசமூகம் முழுவதும் ஒரே உலகத்தைக் கொண்டிருக்க வேண்டும் அல்லது உலகமே இருக்கக்கூடாது என்ற அளவுக்கு பூகோளம் சிறிதாகிவிட்டதென்றும் டெயிலி மெயில் கூறுகிறது.

## இறந்த யானை அழுகி நாற்றம்

கச்சாய், வியாழன்

ஒற்றைக் கொம்புடைய ஒரு காட்டு யானை பின்னம் கால் ஒன்றில் ஒரு மாதத்திற்கு முன்பு சூடுதின்ற இடத்தில் சுடப்பட்டது காரணமாக நடக்க முடியாது கலவெட்டித் திடல் காட்டில் நொண்டிக்கொண்டு திரிந்தது. கடந்த வாரம் கால் புழுத்த நிலையில் இந்த யானை வண்ணாத்தி ஆற்றுள் வீழ்ந்து குற்றுயிராகக் கிடந்து நான்கு நாட்களுக்கு முன்பு இறந்தது.

புளியம் பொக்கணை கிராம தலைவர், காட்டு வனவிலங்குப் பகுதியினர் வந்து யானை இறக்கும்வரை காவல்புரிந்து யானையின் ஒற்றைக் கொம்பை அகற்றிச் சென்றனர். இப்பொழுது சடலம் அழுகி இப்பகுதியில் நாற்றம் அடிக்கிறது.

# இந்திய முஸ்லிம்களின் நிலை குறித்து ஈராக் அதிபர் பாராட்டு

புதுடில்லி, ஏப்ரல் 2

பாரதத்தில் வாழும் 5கோடி முஸ்லிம்களும் லட்சக்கணக்கான இதர சிறுபான்மையினரும் முழு அளவு மதவழிபாட்டு உரிமையும், இதர உரிமைகளையும் அனுபவிப்பதுபற்றி ஈராக் அதிபர் மகிழ்ச்சியடைவதாக டில்லியில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை கூறுகிறது.

பாரதம் பல்வேறு துறைகளில் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் பல்வேறு மரபுகளை இணைக்க அது மேற்கொண்டுள்ள முயற்சியையும் ஈராக் அதிபர் பாராட்டினர். பாரதத்துக்கும் ஈராக்குக்கும் பொதுவாக அரபுநாடுகளுக்கும் பாரதத்துக்குமிடையே நிலவும் நேசஉறவுகள்பற்றி ஈராக் அதிபர் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்.

எல்லைபற்றி பாரதநிலையை ஈராக் புரிந்துகொண்டிருக்கிறதென்றும் எந்தநாடும் ஆக்கிரமிப்பின் பலனை அனுபவிக்க விடக்கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

## அஜ்மல்கான் ராஜ்யசபைக்கு நியமனம்

புதுடில்லி, ஏப்ரல் 2

திரு. வி. டி. கிருஷ்ணமாச்சாரி காலமானதால் ஏற்பட்ட ராஜ்யசபையின் காலி ஸ்தானத்திற்கு திரு. எம். அஜ்மல்கானை ஜனதிபதி ராதாகிருஷ்ணன் நியமித்திருக்கிறார். இவர் காலஞ்சென்றமௌலானு அபுல்கலாம் அஸாதின் காரியதரிசியாக இருந்தவர்.

## விமானப் படை அணிவகுப்பு

புதுடில்லி, ஏப்ரல் 2

விமானப்படை தினத்தையொட்டி நேற்று நாட்டின் பல பகுதிகளில் அணிவகுப்புகள் நடைபெற்றன. பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் வானெலி மூலம் ஒரு செய்தியை விடுத்தார். விமானப்படை தினம் சம்பந்தமாக நடைபெற்ற ஒரு வரவேற்பில் ஜனதிபதி ராதாகிருஷ்ணன், உபஜனதிபதி டாக்டர்ஸகீர் ஹுசெய்ன், மத்திய மந்திரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஆர்ச் பிஷப் மனவேதனை

டாக்கா, ஏப்ரல் 2

கிழக்குப்பாகிஸ்தானில் கிறிஸ்தவர்கள் அனுபவித்த உடல் மன வேதனை குறித்து டாக்கா ஆர்ச் பிஷப் தனது ஈஸ்டர் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார். ஒருபோதும் இவ்வித கஷ்டம் ஒருவருக்கும் ஏற்பட்டதில்லை என்றும் கஷ்டம்பொறுக்காமலேயே அவர்கள் பாரதத்துக்குத் தப்பி ஓடிவந்தனர் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

## மும்மொழிக்கு கிரி ஆதரவு

திருவனந்தபுரம், ஏப்ரல் 2

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மும்மொழிக்கொள்கை அமுல்நடத்தப் படவேண்டும் என கேரள கவர்னர் திரு. வி. வி. கிரி இங்கு கூறினர். தாய்மொழி அல்லது பிராந்திய மொழி, ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் கற்பிக்கப்படவேண்டிய அவசியத்தை அவர் வற்புறுத்தினர்.

# பொருளாதாரம் பாதித்ததேன்? மத்திய வங்கி விளக்கம்

கொழும்பு, வியாழன்

"1963-ம் ஆண்டு இலங்கையின் பொருளாதாரம் பிரதிகூலமான பல நிலைமைகளை எதிர்நோக்கவேண்டியிருந்தது. பணப் பெருக்கமும், வெளிநாட்டுச் செலாவணி வீழ்ச்சியடைந்ததும் இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் அவசியத்தை ஏற்படுத்தியது". நிதி மந்திரி திரு. இலங்கரத்னவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மத்தியவங்கியின் 1963-ம் ஆண்டு அறிக்கையில் மேற்கண்ட விஷயங்கள் கூறப்பட்டுள்ளது.

வருடத்தின் கடைசிப்பகுதியில் அரிசி, மாவு விசேஷமாகச் சர்க்கரை ஆகிய பொருட்களின் வெளிநாட்டு விலைகள் உயர்ச்சியடைந்தன. இந்த விலை உயர்வு பாவனையாளர்களிடமிருந்து வசூலிக்கப்படவில்லை. எனவே பட்ஜட்டில் இந்தநிலைமைகள் பாதித்தன.

## அப்பீல் உரிமை கிடைத்தது!

கேப்டவுன் ஏப். 2

தென்னபிரிக்காவில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் 3 ஆபிரிக்கத் தலைவர்களுக்கு அப்பீல் செய்ய உரிமை அளிக்கப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

## கம்யூனிஸ்ட் மத்தியகமிட்டி

புதுடில்லி, ஏப். 2

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவை ஏற்படுத்த முயலும் முக்கிய தலைவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்தியக் கமிட்டி தேசிய சபையைக் கேட்டிருக்கிறது.

## தென் ஆபிரிக்கா வெளியேற வேண்டும்

ஜெனிவா, ஏப்ரல் 2

தென்னபிரிக்காவையும், போர்த்துக்கலையும் இங்கு நடைபெறும் உலக வர்த்தக மகாநாட்டிலிருந்து வெளியேற்றவேண்டும் என ரஷ்யா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள், கானு ஆகிய நாடுகள் பிரேரணை செய்திருக்கின்றன.

## டில்லி திரும்பினர்

புதுடில்லி, ஏப்ரல் 2

அந்தமான், நிக்கோபார், லட்சத் தீவுகள், மினிக்காய் தீவுகள் ஆகிய இந்தியப்பிரதேசங்களில் 2 வாரம் சுற்றுப்பிரயாணம் செய்த உபஜனதிபதி டாக்டர் ஸகிர் ஹுஸெய்ன் புதுடில்லி திரும்பினர்.

## ஆசிய-ஆபிரிக்க மகாநாடு

ஜாகர்த்தா, ஏப்ரல் 2

ஜாகர்த்தாவில் வருகிற 10-ந் திகதி நடைபெறவிருக்கும் ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டில் கலந்துகொள்ள 23 நாடுகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. இலங்கையும் இதில் கலந்துகொள்ளும்.

## 580 கோடிக்கு கொள்முதல்

புதுடில்லி, ஏப். 2

1962, 63-ம் ஆண்டில் 580 கோடி ரூபாய் பெறுமதியான பொருட்களை அரசாங்கம் வாங்கியது என்றும், இதில் பெரும் பகுதி உள்நாட்டுப் பொருட்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

## சண்டை நிறுத்தம்

அடிஸ்அபாபா, ஏப். 2

எதியோப்பியா-சோமாலியா எல்லையில் சண்டை நிறுத்தம் அமுலாகவிருக்கிறது என அறிவிக்கப்படுகிறது.

## கொடியேற்றம்

மாதகல், வியாழன்

மாதகல் நுணசை ஸ்ரீ கந்தசுவாமிகோயில் கொடியேற்ற உற்சவம் 15-ம் திகதி புதன்கிழமை நடைபெறவிருக்கிறது. 25, 26-ம் திகதிகளில் நடைபெறும் தேர், தீர்த்த உற்சவங்களுடன் விழா நிறைவெய்தும்.

## ஓவியக் கலைஞருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்நகரில் சிறந்ததோர் சித்திரப் பரம்பரையைநிலை நாட்டி வடபகுதி சித்திர வித்தியாதரிசகராக இருந்து இளைப்பாறிய முதுபெரும் ஓவியக் கலைஞர் திரு. எஸ். ஆர். கனகசபையின் மறைவுக்கு, யாழ்ப்பாணத்தில் உள்ள ஓய்வுகால ஓவியர் கழகம், கழக அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு விசேட கூட்டம் கூடி அஞ்சலி செலுத்தியது. கூட்ட ஆரம்பத்தில் இரண்டு நிமிடநேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

## ஸ்தலஸ்தாபன அதிபர்கள் மகாநாடு

### மந்திரி கூட்டுகிறார்

கொழும்பு, வியாழன்

ஸ்தலஸ்தாபன விசாரணை நீதிமன்றம் சம்பந்தமான கருத்துக்களை அறியும் பொருட்டு மேயர்கள், நகரசபைத் தலைவர்கள், பட்டினசபைத் தலைவர்கள், கிராமக் கமிட்டித் தலைவர்கள் ஆகியோரடங்கிய ஒரு மகாநாட்டை உள்நாட்டு மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியா கூட்டவிருக்கிறார்.

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

'டென்னிஸ்ஸி வில்லியம்சின் நாடகங்கள்' என்னும் பொருள்பற்றி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி உதவி அதிபர் திரு. எஸ். ஸ்ரீநிவாசன் யாழ்ப்பாணம் அமெரிக்க தகவல் நிலையத்தில் இம்மாதம் 6-ம் திகதி திங்கட்கிழமை மாலை உரைநிகழ்த்துவாரென அறிவிக்கப்படுகிறது.

பண்டாரநாயக்கா கொலை விசாரணைக் கமிஷன்

# "எம். பி.க்களை விலைக்குவாங்க முயன்றார்கள்"

## புத்தரகித்த கோஷ்டியார் பற்றி முன்னாள் எம். பி. சாட்சியம்

கொழும்பு, வியாழன்

1959-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பட்ஜட் வாக்கெடுப்புக்கு விடப்படுவதற்குச் சற்று முன் புத்தரக்கித, எச். பி. ஜயவர்த்தனடிக்கிடி.சொய்ஸா ஆகியோர் என்னைச் சந்தித்து அரசாங்கத்தை முறியடிக்க எம். பி.க்கள் சிலரை விலைக்கு வாங்கும் பொருட்டு 70,000 முதல் 80,000 ரூபாய்வரை என்னிடம் கொடுக்க முன்வந்தார்கள்.

நாவலப்பிட்டி முன்னாள் எம். பி. திரு. ஆர். ஈ. ஜயதிலக பண்டாரநாயக்கா கொலைவிசாரணைக்கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. பார்குமாரகுலசிங்கத்தின் குறுக்கு விசாரணையின் போது டாக்டர் ஆர். பி. லெனோரா பின்வருமாறு கூறினார்.

"1959-ம் ஆண்டில் நான் ராஜினமாச் செய்தேன். ஸ்ரீமதி விமலா விஜயவர்த்தன சுகாதார மந்திரியாக நியமிக்கப்பட்டதற்கு பாராட்டுத் தெரிவிப்பதற்காக நான் அங்கு போனபோது "ஆயுர்வேத"ம் பெரிய தலையிடியாய் இருப்பதாக அவர் கூறினார்.

திரு. ஆர். ஈ. ஜயதிலகா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

காலஞ்சென்ற பிரதமர் கொலை செய்யப்பட்ட போது நான் ஆஸ்திரேலியாவில் இருந்தேன். இலங்கை திரும்பிய பின் 1959 நவம்பரில் பொலிசாருக்கு ஒரு வாக்குமூலம் கொடுத்தேன்.

டிக்கி சொய்ஸா, எச். பி. ஜயவர்த்தன, புத்தரகித்த ஆகியோர் என்னைச் சந்தித்து அரசாங்கத்திற்கு எதிராக ஓட்டளிக்க சில அரசாங்க எம். பி.க்களை வளைக்க முடியுமா எனக் கேட்டார்கள். இதற்காகப் பணம் செலவழிக்கத் தயாராய் இருப்பதாக எச். பி. ஜயவர்த்தன கூறினார்.

அவர்கள் பார்லிமெண்டுக்கும் வந்து என்னைச் சந்தித்து ன் சில எம். பி.க்களுடன் தொடர்பு கொள்ளவும் முயன்றனர்.

ரூபா 70,000 அல்லது 80,000 செலவிட்டு எம். பி.க்களை விலைக்கு வாங்க அவர்கள் முயன்றனர் என அறிந்தேன். பணத்தைச் செலவழிக்க வேண்டாமென்றும் பணத்தை எம். பி.க்கள் வாங்கிக் கொண்டு அரசாங்கத்துக்கே ஓட்டளிப்பார்கள் என்றும் நான் அவர்களிடம் கூறினேன். 50—43 வாக்குகளால் பட்ஜட் நிறைவேறியது.

"ஸ்ரீமதி விமலாவிஜயவர்த்தனவின் வீட்டில் அநேகமாக ஒவ்வொருநாளும் புத்தரகித்தவைப் பார்த்தேன். சில சமயம் காலையிலும், சிலசமயம் மாலையிலும் பார்த்தேன்" என ஸ்ரீ மதி விஜயவர்த்தனவின் முன்னாள் அந்தரங்கக் காரியதரிசிகளில் ஒருவரான திரு லயனல் பெர்னண்டோ சாட்சியமளிக்கையில் கூறினார்.

"ஸ்ரீமதி விஜயவர்த்தனவின் குடும்ப நண்பரைப் போல் புத்தரகித்த உபசரிக்கப்பட்டார். ஒரு பௌத்த குரு வீட்டுக்கு விஜயம் செய்தால் அவர் உட்கார ஒரு வெள்ளைத்துணி விரிக்கப்படும். புத்தரக்கித விஷயத்தில் அவ்வாறு செய்யப்படுவதில்லை. விமலாவின் குடும்பத்தினருடன் சேர்ந்து ஒரே மேஜையில் உட்கார்ந்து புத்தரகித்த உணவருந்துவதையும் நான் பார்த்திருக்கிறேன்" என்றும் அவர் கூறினார்.

"மீரிகம தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட இரவு ஸ்ரீமதி விமலா விஜயவர்த்தனவும், அவரதுமகளும் மருமகனும் காலஞ்சென்ற பிரதமரைச் சந்திக்கச் சென்றது என் ஞாபகத்திலிருக்கிறது. நானும் அவர்களுடன் சென்றிருந்தேன்.

விமலாவின் மருமகன் பெலிகம்மனைக்கு மந்திரி பதவி எதுவும் கொடுப்பது பற்றித்தாம் ஆலோசிக்க முடியாது என்றும், எனினும் ஸ்ரீமதி விஜயவர்த்தனவின் சேவையைக் கருதி அவருக்கு உதவித் தொழில் மந்திரி பதவி அளிக்க தயாராய் இருப்பதாயும் காலஞ் சென்ற பிரதமர் கூறினார்.

மறுநாள் நான் திரு. பெலிகம்மனவுடன் காலஞ்சென்ற பிரதமரைக்காணச் சென்றேன் அங்கு ஸ்ரீமதி விஜயவர்த்தன புத்தரகித்த உட்பட பலரைக் கண்டேன். திரு. பிலிப் குணவர்த்தனவும் அங்கிருந்தார்.

ஸ்ரீமதி விமலா பிரதமரின் அறைக்குள் அழைக்கப்பட்டார். அவர் வெளியே வந்தபோது சுகாதார மந்திரி பதவி தமக்கு அளிக்கப்பட்டிருப்பதாய்க திரு.லயனல்பெர்னடோ கூறினார்".

## தோட்டங்கள் எடுக்கப்பட்டன

கொழும்பு, வியாழன்

ராகமையிலுள்ள இரு பெரிய தோட்டங்கள அரசாங்கத்தினல் எடுக்கப்பட்டிருக்கின்றன. நிலமற்றவர்களுக்கு தலா கால் ஏக்கர்வீதம் இது பிரித்துக் கொடுக்கப்படும்.


ரெமி பொரேட்டட் டல்கம் பவுடர்




ரெமி பவுடரைப் பாவித்திருக்கிறீர்களா? சிறந்த பவுடருக்கு இணையான இந்த உயர்ந்த பவுடர் - வெகு நியாயமான விலைகளில் கிடைக்கும். அதி உன்னத மூலப் பொருட்களினுல் ஆக்கப்பட்ட ரெமி மிக லளிதமாக வாசனையூட்டப்பட்டுள்ளது. உங்கள் வியாபாரிகளிடத்தில் 2 சைஸ் டின்களில் கிடைக்கும்.

ஆவ்ரா அன் கம்பனி,
10, செட்டியார் தெரு, கொழும்பு.
போன்: 7211, 7212.


## சமாதான சபைகள்

கொழும்பு, வியாழன்

எந்த நோக்கத்துக்காகசமாதான சபைகள் அமைக்கப்பட்டனவோ அந்த நோக்கத்தை அவைகள் நிறைவேற்றவில்லை. நீதிஅமைச்சுக்கு வந்து குவிந்துள்ள பெருந்தொகையான புகார் கடிதங்கள் இதற்குச் சான்று என்று நீதிஅமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. டி. ஜே. ஆர். குணவர்த்தன சமாதானசபைகளின் தலைவருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சிறுசிறு சண்டைகள், சச்சரவுகளைத் தீர்க்கவே சமாதான சபைகள் நிறுவப்பட்டனவென்றும் ஆனல் இந்தச்சபைகள் தனது கடமையைச் செய்யவில்லையென்பது புகார்க் கடிதங்களிலிருந்து தெரிகிறதென்றும் திரு. குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சமாதானசபைத் தலைவர்கள் சிலர் அபராதம் விதித்ததாகவும் இதற்கு அவர்களுக்கு அதிகாரம் இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாகதம்பிரான் கோவில் பொங்கல்

கச்சாய், வியாழன்

புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவில் ஆண்டுப் பொங்கலும் மணவாளக் கோலத் திருவிழாவும் இம் முறை சிறப்பாக நடைபெற்றது. பெருந்தொகையான பக்தர்கள் வடமாகாணத்தில் பல்வேறு பாகங்களிலும் இருந்து வந்து குழுமினர். இ. போ. சபை விசேஷ பஸ் சேவை நடாத்தியது.

பண்டிதர் திரு. த. சுப்பிரமணியம், திரு. எஸ். சின்னத்தம்பி, திரு. இ. த. சுப்பிரமணியம் ஆகிய பலர் சமய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். யாவருக்கும் அன்ன தானம் வழங்கப்பட்டது.

## சமயப்பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று மாலை 6-45 முதல் 8 மணி வரை நல்லூர் தேவஸ்தான சண்முக தீர்த்த மண்டபத்தில் "மணிவார்த்தைக் காக்கிய மெய்வாக்கு" என்னும் பொருள் பற்றி திரு. சு. தம்பாபிள்ளையும் மாலை 6 மணி முதல் 7 மணி வரை வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் 'திருவிளையாடல்'என்னும் பொருள்பற்றி திரு. சி. தம்பிஐயாவும், இரவு 8 மணி முதல் 9 மணி வரை புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய தேவஸ்தானத்தில் 'முருகோதயம்' என்னும் பொருள் பற்றி செல்வி நல்லபிள்ளை நாகமுத்துவும், மாலை 7 மணி முதல் 8 மணி வரை நல்லூர் கிழக்கு மூத்தவிநாயகர் ஆலயத்தில் 'விநாயக தத்துவம்' என்னும் பொருள் பற்றி திரு. இரா. சிவசுப்பிரமணியமும் சொற்பொழிவாற்றுவார்கள். அகில இலங்கை பொது ஜனசேவைச் சங்க சமயப்பிரசார சபையினர் இதை ஒழுங்கு செய்துள்ளனர்.

## பூரண சமூக இன்சூரன்ஸ் திட்டம்

கொழும்பு, வியாழன்

பூரண சமூக இன்சூரன்ஸ் திட்டமொன்றை நிதிமந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன ஆதரிக்கிறார். இதற்காக மூவரடங்கிய கமிட்டியை அவர் நியமித்து விரைவில் இதுபற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டிருக்கிறார்.

அதிக வேலையளிக்கும் சாத்தியங்கள் பற்றி இக்கமிட்டி ஆராயும் எனத் தெரிகிறது.

## நியாயவிலைக் கடை

கொழும்பு, வியாழன்

வெள்ளவத்தையில் நியாயவிலை இறைச்சிக்கடை யொன்று விரைவில் திறக்கப்படவிருக்கிறது.



கொழும்புத்துறை முனிவர் சிவமாகிநிற்கும் ஸ்ரீலஸ்ரீ யோகீஸ்வரசுவாமிகளின் குரு யோகீஸ்வரர் செல்லப்பா சுவாமிகளின் குருபூஜை அண்மையில் நிறைவேறியபொழுது எடுக்கப்பட்டபடம்.

# உழைக்கும்பத்திரிகையாளருக்கு அதிக விடுமுறை தேவை"

## கமிஷனுக்கு முன் சாட்சியம்

கொழும்பு, வியாழன்

பத்திரிகைக் கமிஷன் முன் சாட்சியமளித்த பத்திரிகை எழுத்தாளர் திரு. பியல் விக்ரமசிங்க தொடர்ந்து சாட்சியமளிக்கையில் "நவஸ" பத்திரிகை மேசமான படங்களையும், செய்திகளையும் தாங்கி வெளிவருவதாகக் கூறினர்.

"லங்காதீப" பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட பின் சிங்களப் பத்திரிகைகளின் தரம் வீழ்ச்சியடைந்து வருவதாயும் அவர் கூறினர்.

ஆங்கிலச் செய்திப்பத்திரிகைகளின் ஆசிரியர்களும், உதவி ஆசிரியர்களும் சிங்களத்தில் அறிவு பெற்றிருக்கவேண்டும் என்றும் அவர் கூறினர்.

குற்றங்கள் பற்றிய செய்திகளுக்கு பத்திரிகைகளில் அதிக இடம் அளிக்கப்படுவதாயும் அவர் கூறினர்.

"லேக்ஹவுஸ் பத்திரிகைகள் மட்டுமே வேலைகளுக்குப் பத்திரிகை மூலம் விளம்பரம் கோருகின்றன.

இதர பத்திரிகைகள் அப்படிச் செவதில்லை. லேக்ஹவுஸ் ஸ்தாபனத்தில் ஆசிரியர்களுக்கு உயர்ந்த சம்பளம் அளிக்கப்படுகிறது. சேவைக் காலம் கணிக்கப்படுவதில்லை. ஆசிரியரின் தயவைப் பெற்றவர்கள் முன்னணிக்கு வருகிறார்கள்" என்றும் அவர் கூறினர்.

"உரிய விடுமுறைகளை நாங்கள் அனுபவிக்கவில்லை. பத்திரிகை எழுத்தாளர்கள் சில சமயம் அதிக நேரம் வேலை செய்ய வேண்டியிருப்பதால் அவர்களுக்குப் போதுமான விடுமுறை அளிக்கப்படவேண்டும். சனிக்கிழமை விடுமுறையுடன் அவர்களுக்கு 30 நாள் சலுகை விடுமுறையும் அளிக்கப்படவேண்டும்" என்றும் அவர் கூறினர்.

பத்திரிகை எழுத்தாளர்களாகிய எங்களுக்கு குறைந்த ஊதியமே அளிக்கப்படுகிறது. ஒரு செய்தியை நாங்கள் தவறவிட்டால் அதற்கு விளக்கம் கோரப்படுகிறது. சில சமயம் வேலைநீக்கத்துக்கும் நாங்கள் உள்ளாகவேண்டியிருக்கிறது. வெளியூர் நிருபர்களுக்கும் குறைந்த ஊதியமே வழங்கப்படுகிறது. ஒரு செய்தியை அவர்கள் தராவிட்டாலும் விளக்கம் கோரப்படுகிறது. வேலை நீக்கத்திற்கும் அவர்கள் உள்ளாகிறார்கள்" என்றும் அவர் கூறினர்.

## திருவள்ளுவர் திருநாள்

கொழும்பு, வியாழன்

"இந்த ஆண்டுக் திருவள்ளுவர் திருநாள் 26-5-64 செவ்வாய்க்கிழமை யாகும். இந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடுமாறு உலகமெங்கும் உள்ள தமிழ்ப் பெருமக்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். திருவள்ளுவர் திருநாள் தமிழினத்தின் பொதுத் திருநாளாக ஒவ்வொருவர் வீட்டிலும் கொண்டாடப்படல் வேண்டும். திருக்குறளும் திருவள்ளுவர் படமும் ஒவ்வொரு தமிழர் வீட்டையும் அணிசெய்தல் வேண்டும்" என்று தமிழ் மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஒரு அறிக்கையில் கேட்டுள்ளார்.

"தமிழ் நாட்டரசினர் சென்னைச் சட்டமன்றத்தைத் திருவள்ளுவர் படத்தால் அண்மையில் அணியுறுத்தியுளர். எல்லாப் பொது நிலையங்களும், தமிழ் மன்றங்களும் திருவள்ளுவர் படத்தைத் தங்களுடைய மண்டபங்களில் வைத்துப் போற்றல் வேண்டும்.

காளிதாசர், தாகூர், பாரதியார் முதலிய புலவர் பெருமக்கள் திருநாள்களைக் கொண்டாடுதல் போலத் திருவள்ளுவரின் திருநாளையுங் கொண்டாடுமாறு தமிழ்நாட்டு அரசுக்கும் வேண்டுகோள் விடுத்துளோம்.

முன்னைய ஆண்டுகளிற் போல இவ்வாண்டும் 26-5-64 இல் சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலி பரப்புமாறு எட்டு வானொலி நிலையங்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளோம்" என்று அவர் தமது அறிக்கையில் கூறுகிறார்.

## 3 வருடங்களுக்கு ஒரு 'எக்ஸ்ரே'

கொழும்பு, வியாழன்

அரசாங்க சேவையிலுள்ள எல்லா ஆசிரியர்களும் மூன்று வருடத்திற்கொருதடவை 'எக்ஸ்ரே' எடுத்துக்கொள்ளவேண்டுமென கல்வி டைரக்டர் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருக்கிறார்.

# வவுனியா மாவட்ட வித்தியாலயங்களின் விளையாட்டுப் போட்டி

## புதியசாதனைகள் மாணவர் 11; மாணவிகள் 5

### வவுனியா தமிழ் மகாவித்தியாலயம், எருக்கலம்பிட்டி மத்திய மகாவித்தியாலயம் வெற்றி

வவுனியா, வியாழன்

வவுனியா மாவட்ட மத்திய மகா, மகாவித்தியாலயங்களின் விளையாட்டுப் போட்டி கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களிலும் வவுனியா தமிழ் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் பதினொரு ஆண்கள் பாடசாலைகளும், ஏழு பெண்கள் பாடசாலைகளும் பங்குபற்றின. ஆண்கள் பகுதியில் மொத்தம் பதினொரு புதிய சாதனைகளும் பெண்கள் பகுதியில் ஐந்து புதிய சாதனைகளும் நிலைநாட்டப்பட்டன. ஆண்கள் பகுதியில் எருக்கலம்பிட்டி மத்திய மகாவித்தியாலயமும், பெண்கள் பகுதியில் வவுனியா தமிழ் மகாவித்தியாலயமும் முதலிடங்களைப் பெற்றுக் கொண்டன. எருக்கலம்பிட்டி மத்திய மகாவித்தியாலயத்தை சேர்ந்த மாணவன் எஸ். எம் யமால்தீன் மூன்று புதிய சாதனைகளை நிலைநாட்டியுள்ளார். வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த சகோதரிகள் செல்விகள் அற்புதம், சுகிர்தம், நேசம் ஆகிய மூவரும் பெண்கள் மேற்பிரிவிலும் கீழ்ப்பிரிவிலும் 5 புதிய சாதனைகளை நிலைநாட்டியதுமல்லாமல் தங்கள் கல்லூரிக்குப் பெண்கள் பிரிவில் அநேக புள்ளிகளைத் தட்டிக்கொடுத்து சாம்பியன் இடத்தையும் பெற்றுக்கொடுத்தார்கள்.

யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. ஆர். எஸ். சீவரத்தினம் பரிசில்களை வழங்கினர். வவுனியா கல்வி அதிகாரி தனது உரையில் வவுனியா தமிழ் மகாவித்தியாலய மாணவிகளின் விளையாட்டுத் திறமையைப் பாராட்டினர்.

**புள்ளி விபரங்கள் பின்வருமாறு:**

ஆண்கள் பகுதியில்: எருக்கலம்பிட்டி மத்திய மகாவித்தியாலாம் - 72 புள்ளிகள்; சென்ட். சேவியர் கல்லூரி மன்னார், - 43 புள்ளிகள்; வவுனியா தமிழ் மகாவித்தியாலயம் - 40 புள்ளிகள்.

பெண்கள் பகுதியில்: வவுனியா தமிழ் மகாவித்தியாலயம் - 60 புள்ளிகள்; வித்தியானந்தம் கல்லூரி - 19 புள்ளிகள்; காமினி மகாவித்தியாலயம் – 9 புள்ளிகள்.

**பரிதிவட்டம் எறிதல்**

சிரேஷ்டபிரிவு: ஆண்கள்) என். ராஜதுரை, 98 அடி வவுனியா மகாவித்தியாலயம்98 அடிபுதிய சாதனை, எ. யஸ்ரின் எருக்கலம்பிட்டி, மத்திய மகாவித்தியாலயம், எஸ். தேவராசா, முல்லைத்தீவு மகாவித்தியாலயம்.

**உயரம் பாய்தல்**

எஸ். எம். யமல்தீன், எருக்கலம்பிட்டி, மத்திய மகா வித்தியாலயம், 5 அடி 3 அங். (பழைய சாதனை சமனுக்கப்பட்டது), எம். அல்பிரட், வவனியா மகாவித்தியாலயம், எஸ. அலோசியஸ் குன்சி, சென். சேவியஸ் கல்லூரி.

**குண்டெறிதல்**

எஸ. எம் யமல்தீன், எருக்கலம்பிட்டி, மகாவித்தியாலயம் 34 அடி 7½ அங். புதிய சாதனை, ஏ. யஸ்ரின், எருக்கலம்பிட்டி.மகாவித்தியயலம், எம். ராஜதுரை, வவனியா, மகாவித்தியாலயம்.

**கெந்திப்பாய்தல்**

கே. பேரம்பலம், வவனியா மகாவித்தியாலயம், 35 அடி-10 அங், எஸ். சுவாம்பிள்ளை, சென்ட். சேவியர்கல்லூரி,எம். எம் அப்துல் ரகுவ், எருக்கலம்பிட்டி, மத்திய மகாவித்தியாலயம்.

**400 மீட்டர் ஓட்டம்**

எஸ். எம். யமல்தீன், எருக்கலம்பிட்டி, மத்திய மகாவித்தியாலயம், ஏ. எம். ஏ. அசீஸ், மத்திய மகா வித்தியாலயம், ஏ. யோசேப்பு,வவனியா தமிழ் மகாவித்தியாலயம்.

**100 மீட்டர் ஓட்டம்**

எஸ். தங்கவேலு, வவனியா தமிழ் மகாவித்தியாலயம், எம். எஸ். கலீல் அல், அசார்மகா வித்தியாலயம், எஸ். தேவராசா, முல்லைத்தீவு, மகாவித்தியலயம்.

**800 மீட்டர் ஓட்டம்**

ஏ. கந்தசாமி, புதுக்குடியிருப்பு, மகாவித்தியாலயம்,எம். யூனைட், எருக்கலம்பிட்டி, மத்திய மகா வித்தியாலம், ஜே. அன்ரோனியஸ், சென்ட். சேவியர் கல்லூரி.

**200 மீட்டர் ஓட்டம்**

எஸ். தங்கவேலு, வவனியா தமிழ் மகாவித்தியாலயம், ஏ. எம். ஏ. அசீஸ், எருக்கலம்பிட்டி, மத்திய மகாவித்தியாலயம், எம். எஸ். கலீல், அல் அசார் மகாவித்தியாலயம்.

**1500 மீட்டர் ஓட்டம்**

ஜே. அன்ரோனியஸ், சென். சேவியர் கல்லூரி, எம். சிவப்பிரகாசம், வித்தியானந்தக்கல்லூரி, ஏ கந்தசாமி, புதுக்குடியிருப்பு, மகாவித்தியலயம்.

**4x100 மீட்டர் ஓட்டம்**

**(அஞ்சல்)**

எருக்கலம்பிட்டி மத்தியமகா வித்தியாலம், (புதிய சாதனை) வவனியா தமிழ் மகா வித்தியாலயம், மடுமந்தை வித்தியாலயம்.

**நீளம் பாய்தல்**

எவ். சுவாம்பிள்ளை, சென்ட். சேவியர் கல்லூரி,7 அடி 7½ அங். புதிய சாதனை, அரியாட், முல்லைத்தீவு மகாவித்தியாலயம், எஸ். எம். ரசீக், எருக்கலம்பிட்டி, மத்திய மகாவித்தியாலயம்.

**4x400 மீட்டர் ஓட்டம்**

**அஞ்சல்**

எருக்கலம்பிட்டி, மத்திய மகாவித்தியாலயம், வவனியா தமிழ் மகாவித்தியாலயம், வித்தியானந்தாக் கல்லூரி,

**நீளப் பாய்தல்**

கனிஷ்டபிரிவு: ஆண்கள்: கே. யல்சஸ்,எருக்கலம்பிட்டிமத்திய மகாவித்தியாலயம். 15 அடி 7 அங். ஏ. சி. சூரியகுமார், சென்ற் சேவியர் கல்லூரி, பி. மரியநாயகம் குரூஸ். சென்ட். சேவியர் கல்லூரி.

**பரிதிவட்டம் எறிதல்**

பி. சிவமுத்துலிங்கம், வவனியா தமிழ் மகாவித்தியாலயம் 87 அடி 3 அங்குலம். ஏ. எவ். ஜெகநாத். சென்ற் சேவியர் கல்லூரி, எம். இஸ்மாயில், எருக்கலம்பிட்டி மகாவித்தியாலயம்.

**குண்டெறிதல்**

ஏ. எவ். ஜெகநாத், சென்ட் சேவியர் கல்லூரி 30 அடி (புதியசாதனை) சி. இமில் விகாடோ, அல். அசன் மகா வித்தியாலயம், எம். அப்துல் ரகுல். எருக்கலம்பிட்டி மத்திய மகாவித்தியாலயம்.

**100 மீட்டர் ஓட்டம்**

எஸ். எம். யகுபார், அல் அசார் மகாவித்தியாலயம் (புதிய சாதனை), ஏ. எம். அப்துல் வகீட், எருக்கலம்பிட்டி மத்திய மகாவித்தியாலயம், எஸ். கச்சுமுகடீன். எருக்கலம்பிட்டி மத்திய மகாவித்தியாலயம்.

**உயரம் பாய்தல்**

ராசா செபஸ்தியான்பிள்ளை, சென்ட் சேவியர் கல்லூரி 4 அடி 11 அங்குலம் (புதிய சாதனை), எஸ். எம். யகுபார், அல் அசார் மகாவித்தியாலயம், என். எம். யிவ்றே, அல். அசார் மகாவித்தியாலயம்.

**200 மீட்டர் ஓட்டம்**

எஸ். எம். யகுபார், அல். அசார் மகாவித்தியாலயம் (புதிய சாதனை), ராசா செபஸ்தியாம்பிள்ளை, சென்ட் சேவியர் கல்லூரி. எஸ. கச்சு முகடீன், எருக்கலம்பிட்டி மகா வித்தியாலயம்.

**4X200 மீட்டர் அஞ்சல் ஓட்டம்**

எருக்கலம்பிட்டி மத்தியமகா வித்தியாலயம், புதிபசாதனை அல். அசார் மகாவித்தியாலயம், சென்ட்சேவியர் கல்லூரி.

(6-ம் பக்கம் பார்க்க)

---

இந்திய வம்சாவளியினர்

# இந்தியா செல்ல பண உதவி அளிக்க முடிவு

கொழும்பு, வியாழன்

ஒரு குடும்பத்துக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் உதவிப்பணம் கொடுத்து இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் தாமாக நாட்டை விட்டு வெளியேறுவதற்குத் தூண்டுதல் அளிப்பதென்று அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத்தெரிகிறது. உதவிப்பணத்தை குடியேற்ற வெளியேற்ற கட்டுப்பாட்டதிகாரிமூலம் அரசாங்கம் கொடுக்கும்.

நேரு-கொத்தலாவலை உடன்படிக்கையிலுள்ள இந்தத்தூண்டுதல் திட்டம் இந்தவாரமே அமுலுக்குக் கொண்டுவரப்படவிருக்கிறது.

உதவிப்பணத்துடன் ஐயாயிரம் ரூபாய்க்கு மேற்படாத சொத்துடையவர்களுக்கு உதவிப்பணம் வழங்கப்படும்.

இந்தியப் பிரஜாவுரிமைக்கு மனுச் செய்த திருமணமானவர்களின் மனைவிமாருக்கும் உதவிப்பணம் வழங்கப்படும். ஆனால் அவர்கள் தங்களது பிள்ளைகளையும் இந்தியாவுக்குக் கொண்டுசெல்ல வேண்டும்.

55 வயதும் அதற்கு மேற்பட்டவர்களுக்கும் தலா 100 ரூபாயும், 50 வயதுக்கும் 54 வயதுக்குமிடைப்பட்டவர்களுக்கு தலா 250 ரூபாயும், 45 வயதுக்கும் 49 வயதுக்குமிடைப்பட்டவர்களுக்கு தலா 350 ரூபாயும், 45 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு தலா 400 ரூபாயும் மூன்று பிள்ளைகளுக்கு மேற்படாமல் மனைவிகளும் பிள்ளைகளுக்கும் தலா 150ரூபாயும் வழங்கப்படும்.

---

## சமசமாஜ தலைவர்கள்

### யாழ்ப்பாணம் வருகை

நல்லூர், வியாழன்

இலங்கை சமசமாஜக் கட்சியின் வாலிபர் சம்மேளனத்தின் வடபகுதிக் கிளையின் மகாநாடு ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது.

ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெறவிருக்கும் இம்மகாநாட்டில் டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா, திருமதி விவியன் குணவர்த்தன, எட்மண்ட் சமரக்கொடி ஆகியோர் பிரதம பேச்சாளராகக் கலந்துகொள்வர் என அறிவிக்கப்படுகின்றது.

## துண்டுப் பிரசுரம்

கொழும்பு, புதன்

"சர்வாதிகார அரசாங்கத்தின் மந்திரிசபை" என்ற தலைப்பில் கம்பகா மாவட்டத்தில் ஒரு துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது. சர்வாதிகார ஆட்சி ஏற்படும் என்றும் பொதுமக்கள் விழிப்புடனிருக்க வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது-

---


றீகல் (யாழ்ப்பாணம்)

REGAL — JAFFNA

NOW SHOWING

Daily at 4-45, 7-00 & 9-45 p. m.

Morning Shows
Sats. & Suns. at 10-30 a. m.

DEAN MARTIN
in
SONGS IN THE WORLD
(Totalscope—Colour) 81


## வானொலிநிகழ்ச்சிகள்

### வெள்ளி 3-4-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 பக்திப்பாடல்கள் — யோகராணி சின்னத்துரை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானஞ்சலி, 7-15 பாட்டு — ஞானம் சந்தானம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-15 நாடகம் — 'சீதக்காதி தந்த செல்வம்' — எம். ஒ. கபூர் எழுதியது (மறு ஒலிபரப்பு), 9-15 மதிப்புரை, 9-30 நேயர் விருப்பம், 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 காந்தி அஞ்சலி, 7-30 கே. ஆர். ராமையாபிள்ளை — நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 கல்வி ஒலிபரப்பு, 2-30 இடைவேளை

மாலை 5-15 கே. ஆர். ராமையாபிள்ளை — நாகஸ்வரம்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 பொங்கி எழும் பாரதம் — சித்திரம், 7-45 எஸ். பாலச்சந்தர் — வீணை, 9-15 இசைமாலை, 9-30 மெல்லிசை, 9-45 பலகணி, 10-00 திரைப்படஇசை.

---

**அரசாங்க அறிவித்தல்**

**வியாபார மொத்தவிற்பனவு வரி செலுத்தல்**

என் 654-முதற் செலுத்தும் தொகை 1964 மார்ச் 31-ந் திகதி முடிந்த காலாண்டுக்குரியது

இவ்வரி செலுத்தவேண்டிய ஒவ்வொருவரும் செய்யவேண்டியன:-

(அ) அவருக்கு வழங்கப்பட்டிருக்கும் விபரத் திரட்டைப் பூரணப்படுத்தல்.

ஆ) 1964 ஜனவரி 1-ந் திகதி முதல் 1964 மார்ச் 31-ந் திகதி வரையுள்ள காலத்துக்குரிய மொத்தவிற்பனவில் சரியான வரிவிகிதத்தில் வரியைக் கணிக்குக. வரி விகிதங்களாவன:-(1 உற்பத்தி விபாபார மொத்தவிற்பனவில் 3 நூற்று வீதம். (2) உற்பத்தியாளருடையதல்லாத மற்றைய வியாபாரங்களின் மொத்தவிற்பனவில் அரை நூற்று வீதம்.

(இ) 1964 ஏப்ரல் 15-ந் திகதிக்கு முன் செலுத்தவேண்டிய வரிக்குரிய பணத்தோடு விபரத் திரட்டையும் சேர்த்து "வரிமதிப்ப ளர், (வியாபார மொத்த விற்பனவு வரிக்கிளை) உள்நாட்டு இறை வரித் திணைக்களம், த. பெ. 515, கொழும்பு-1" என்ற முகவரிக்கு அனுப்புக.

1964 ஏப்ரல் 15-ந் திகதிக்கு முன் அவ்வகையான ஒருவர் வரியைச் செலுத்தத் தவறின் உடனடியாக 5 நூற்று வீதத் தண்டம் சேர்க்கப்படுமென்பதை அவதானிக்குக. பின்னும் வரியைக் கொடுக்காமலிருப்பின் மேலும் தண்டம் சேர்க்கப்படும்.

உள்நாட்டு இறைவரி ஆணையாளர்
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
த. பெ. 515,
கொழும்பு 1.

---


**வரி விளம்பரம்**

**அரைச்சலார்**

அநேக மக்களின் ஆதரவு பெற்ற சுன்னாகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலார். 62

**றேடியோ**

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.
S. சுலைமான்கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

**மாணவர் தேர்ச்சி அறிக்கை**

தவணைப் பரீட்சைப் பெறுபேறு குறிக்கும் மாணவர் தேர்ச்சி அறிக்கை சாதாரண காகிதத்தில் அச்சிட்டு அனுப்ப 100க்கு ரூ. 5-00 உடன் ஓடர் அனுப்புக. கலா பவன அச்சகம், பருத்தித்துறை. 204

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


---

## சிங்களமொழி அமுல்

### அப்போதிக்கரிமார் கோரிக்கை

கொழும்பு, வியாழன்

அப்போதிக்கரிமார் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாக பிரிவு படுத்தப்பட்டிருப்பதாகவும் அதிகமானேர் மத்திய ஆஸ்பத்திரிகளுக்குப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றுவதாகவும் உத்தியோக மொழியில் அநேகர் தகுதியற்றவர்களாக இருக்கிறார்ளென்றும் அரசாங்க அப்போதிக்கரிமார் சங்கக் காரியதரிசி சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

உத்தியோகமொழியில் அவர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களைப் பார்வையிடுவதில் வசதிக்குறைவு இருப்பதாகவும் ஆதலால் உத்தியோக மொழியில் தேர்ச்சியடையும் காலம் வரை எல்லாக் கடிதங்களுடனும் சுற்றறிக்கைகளுடனும் ஆங்கில மொழிபெயர்ப்பும் அனுப்பவேண்டுமென்றும், அவர்களுடன் சம்பந்தப்பட்ட மற்ற விஷயங்களிலும் ஆங்கிலம் பாவிக்கப்படவேண்டும் என்றும் அக்கடிதத்தில் கேட்டுள்ளனர்.

வடபகுதி அசைஸ் விசாரணை

# ஊறணி கொலை முயற்சி வழக்கில் எதிரிகள் விடுதலை

## சாட்சிக்கு 2மாதச்சிறை

யாழ்ப்பாணம், வெள்ளி

ஊறணி கொலை முயற்சி வழக்கில் நீதியரசர் எதிரிகள் நால்வரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்ததோடு பொய்ச் சாட்சியமளித்த ராஜரத்தினம் என்பவருக்கு இரண்டுமாத கடுழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

ஊரணி கொலை முயற்சி வழக்கு நேற்றுக் காலை ஐந்தாவது தினமாக தொடர்ந்து நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா கியூ. ஸி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நீதியரசரின் தொகுப்புரை முடிவுற்றதும், ஜூரிகள் தனிமையாக் கூடி ஆலோசித்தபின் எதிரிகள் நால்வரும் குற்றவாளிகள் அல்லவென ஏகமனதாக தெரிவித்தனர். இதனைத்தொடர்ந்து நீதியரசர் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

பொலிஸ் நீதிமன்றத்திலும் அசைஸ் நீதிமன்றதிலும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளித்ததை சாட்சியாகிய ராஜரத்தினம், ஒப்புக் கொண்டு இக் குற்றச் சாட்டுகளுக்கு தான் குற்றவாளியெனவும் தெரிவித்தார்.

ராஜரத்தினம் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. எஸ். நாகராசா, சாட்சியமளித்தவர் வயது குறைந்தவரென்றும், படிக்காதவரென்றும், இதற்கு முன் வழக்கில் சம்பந்தப்படவில்லையென்றும்,காயமடைந்தவரின் சில சொந்தக்காரர்கள் அவரைத் தவறான முறையில் வழிநடத்தியிருக்கிறார்களென்றும், இக் குற்றச் சாட்டுகளை அவர் ஏற்றுக் கொள்கிறாரென்றும் தெரிவித்தார்.

இதுசம்பந்தமாக நீதியரசர் தீர்ப்பளிக்கும் போது சாட்சியமளித்தவர் வேண்டுமென்று நீதிமன்றத்தை அவமதித்திருக்கிறாரென்றும், பல தடவை முன்னுக்குப் பின் முரணாகச் சாட்சியமளித்ததோடு, தான் கூறியசாட்சியத்தையே பொய் யென ஒப்புக் கொண்டிருக்கிறாரென்றும் தெரிவித்தார்.

சட்டபூர்வமாக ஜூரிசடையினர் பொய் சாட்சியம்பற்றி நிர்ணயித்தால் 7 வருடச்சிறைத் தண்டனை கிடைக்கும், என்றும் பொய்ச் சாட்சியமளித்ததற்கு 3 மாத கடூழிய சிறைத்தண்டனை அளிக்கவேண்டுமென்றும் ஆனால் அவர்சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திறமையாக வாதாடியதால் ஒரு மாதம் குறைத்து சாட்சிக்கு 2 மாதக் கடூழிய சிறைத்தண்டனை விதிப்பதாகவும் நீதியரசர் மேலும் தெரிவித்தார்.

இவ்வழக்கில் காங்கேசன்துறைப் பகுதியைச்சேர்ந்த ஊறணியில் 1962-ம் ஆண்டு டிசம்பர்மாதம் 17-ம் திகதி விகடராசா, வி. செல்லையா, எஸ். செல்லத்துரை, எஸ். கணபதிப்பிள்ளை ஆகிய நால்வரும், நாராயணபிள்ளை வயிரமுத்துவை கொலைசெய்ய முயற்சித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

நான்கு எதிரிகள் சார்பிலும் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், திரு. ரி. தம்பிரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானர், முடிக்குரியதரப்பில் திரு. ஏ. ஏ. டி' சில்வா வழக்கை நடத்தினர்.

---

# பிரேஸிலுக்கு புதிய ஜனாதிபதி

ரியோடிஜெனிரோ, ஏப்ரல் 2

பிரேஸிலில் புரட்சியிலீடுபட்ட ராணுவத்தினர் ரியோடிஜெனிரோ நகரைக் கைப்பற்றிவிட்டதாயும் அந்த நாட்டுக் காங்கிரசின் தலைவர் திரு. மசலி புதிய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது. நீதிமந்திரி கைதுசெய்யப்பட்டிருக்கிறார் எனவும் கூறப்பட்டது. புரட்சி செய்யும் ராணுவஜெனரல்கள் இத்தகவலைத் தெரிவித்தனர்.

ராஜினமாச் செய்ததாகக் கூறப்பட்ட பிரேஸில் அதிபர் தென்ராஜ்யம் ஒன்றுக்குச் சென்றுவிட்டதாக புரட்சித் தலைவர்கள் கூறியதை தலைநகரில் மறுக்கிறார்கள். புரட்சித்துருப்புகள் தலைநகர் பிரேஸிலியை நெருங்கிக் கொண்டிருப்பதாகவும் கூறப்பட்டது.

---

# ஆசிரியைக்குப் பிரியாவிடை

கைதடி, புதன்

கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலையிலிருந்து கைதடி நுணுவில் பாடசாலைக்கு மாற்றலாகிச் சென்ற திருமதி ம. கனகலிங்கம் ஆசிரியையின் சேவை நலனைப் பாராட்டுமுகமாக முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலை ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் ஆசிரியைக்கு பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. சி. க. சுப்பிரமணியம் தலைமையில் ஒரு விருந்துபசாரம் அளிக்கப்பெற்றது.

ஆசிரியர் சி.சி சுப்பையா ஆசிரியர், மாணவர் சார்பில் சேவைநல உபசாரப்பத்திரம் வாசித்தளித்தார். தலைமையாசிரியரும், பிரதம உதவியாசிரியரும் உரை நிகழ்த்தினர்.

---

# "செயற்கைரப்பர் உற்பத்தியினுல் இலங்கைபாதிக்கப்பட்டுள்ளது"

## ஜெனிவாவர்த்தக மகாநாட்டில் மந்திரி மைத்ரிபால பேச்சு

ஜெனிவா, ஏப். 2

சர்வதேச சரக்கு. ஒழுங்குகளை திரும்பவும் பரிசீலித்து மாற்றியமைக்கவேண்டும் என ஜெனிவா உலக வர்த்தக மகாநாட்டில் பேசிய இலங்கை வர்த்தக மந்திரி திரு. மைத்திரிபாலசேனநாயக்கா கூறினர்.

பெருமளவு முன்னேற்றமடைந்த நாடுகள் அபிவிருத்தி குன்றிய நாடுகளுக்கு உதவியளிக்கவேண்டும் என்றும் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறினர்.

மாற்றியமைக்கப்படவேண்டிய விஷயங்களில் சர்வதேச தேயிலை உடன்பாடும் ஒன்று என திரு. மைத்திரிபால கூறினர்.

இலங்கையைப் பொறுத்த வரை அதன் ரப்பர் ஏற்றுமதி செயற்கை ரப்பரினுல் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேமாதம் நடுப்பகுதி வரை வர்த்தக மகாநாடு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

# கிலீப் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூ. 300 பெறும் நூறு அதிர்ஷ்ட டிக்கட்டுகளின் இலக்கங்கள் வருமாறு:-

| | |
|---|---|
| 11 S 0608 | 13 W 0160 |
| 05 V 0066 | 07 Y 0368 |
| 18 G 0043 | 15 X 0249 |
| 07 W 0627 | 21 Q 0858 |
| 12 D 0530 | 11 D 0606 |
| 04 D 0361 | 08 K 0643 |
| 02 H 0617 | 05 M 0948 |
| 13 D 0118 | 19 N 0602 |
| 14 K 0441 | 16 N 0982 |
| 03 F 0078 | 02 M 0729 |
| 10 L 0125 | 20 S 0600 |
| 15 A 0908 | 12 Y 0446 |
| 16 J 0499 | 13 E 0004 |
| 17 R 0952 | 08 F 0070 |
| 13 H 0255 | 17 K 0544 |
| 19 C 0994 | 02 O 0424 |
| 09 D 0118 | 11 L 0383 |
| 15 K 0251 | 08 A 0156 |
| 04 X 0771 | 08 E 0149 |
| 05 O 0368 | 08 P 0645 |
| 14 E 0780 | 02 K 0662 |
| 21 C 0562 | 01 A 0433 |
| 01 G 0433 | 18 V 0121 |
| 12 Z 0887 | 18 W 0048 |
| 19 V 0508 | 02 X 0506 |
| 03 W 0889 | 10 W 0945 |
| 13 L 0271 | 01 J 0744 |
| 01 W 0817 | 17 T 0105 |
| 09 D 0287 | 21 Y 0555 |
| 02 T 0794 | 21 Y 0075 |
| 01 E 0755 | 20 X 0858 |
| 17 J 0320 | 12 V 0777 |
| 18 C 0380 | 16 C 0679 |
| 10 B 0954 | 21 W 0043 |
| 20 L 0961 | 07 R 0763 |
| 15 S 0393 | 01 R 0785 |
| 07 K 0117 | 18 S 0011 |
| 05 D 0761 | 05 G 0579 |
| 19 O 0875 | 14 P 0864 |
| 01 M 0355 | 02 F 0366 |
| 10 E 0474 | 20 H 0181 |
| 09 Q 0345 | 07 X 0822 |
| 09 V 0396 | 03 Q 0535 |
| 02 E 0856 | 20 C 0553 |
| 04 D 0683 | 21 L 0284 |
| 18 S 0232 | 04 R 0550 |
| 16 P 0913 | 14 G 0588 |
| 01 K 0715 | 09 R 0808 |
| 16 E 0745 | 13 T 0086 |
| 07 Q 0758 | 03 F 0026 |

---

# வவனியா . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

### 4X200 மீட்டர் அஞ்சல் ஓட்டம்

சிரேஷ்டபிரிவு:பெண்கள்:வவனியாமகாவித்தியாலயம் புதிய சாதனை, வித்தியானந்தக் கல்லூரி, முல்லைத்தீவு மகாவித்தியாலயம்.

### 100 மீட்டர் ஓட்டம்

கு. அற்புதம், வவனியா தமிழ் மகாவித்தியாலயம், (புதிய சாதனை) கு. சுகிர்தம், வவனியா தமிழ் மகாவித்தியாலயம்.

### 200 மீட்டர் ஓட்டம்

கு. அற்புதம், வவனியா தமிழ்மகாவித்தியாலயம்,(புதிய சாதனை) கு. சுகிர்தம், வவனியா தமிழ் மகாவித்தியாலயம், எஸ. இந்திராணி, வித்தியானந்தாக கல்லூரி.

### 4x100 மிட்டர் அஞ்ல்ல் ஓட்டம்

வவனியா தமிழ்மகாவித்தியாலயம் (புதியசாதனை) வித்தியானந்தக் கல்லூரி, காமினி மகாவித்தியாலயம்.

### 4X200 மீட்டர் அஞ்சல் ஓட்டம்

கனிஷ்டபிரிவு பெண்கள்: வவனியா தமிழ்மகாவித்தியாலயம், வித்தியானந்தக்கல்லூரி, காமினி மகாவித்தியாலயம்.

### 100 மீட்டர்

கு. நேசம், வவனியா மகாவித்தியாலயம். எஸ். உலகதேவி, வவனியா மகாவித்தியாலயம். கே. பிரேமாவதி, காமினி மகாவித்தியாலயம்.

### 150 மீட்டர்

கு. நேசம், வவனியா தமிழ் மகாவித்தியாலயம் எஸ். உலகதேவி, வவனியா தமிழ் மகாவித்தியாலயம். கே. பிரேமாவதி. காமினி மகாவித்தியாலயம்.

### 4x100 மீட்டர் அஞ்சல் ஓட்டம்

வவனியா தமிழ் மகாவித்தியாலயம், விததியானந்தாக் கல்லூரி, காமினி மகாவித்தியாலயம்.

---

# யாழ். ஆஸ்பத்திரிகளில் மருந்துதட்டுபாடு

நல்லூர், வியாழன்

வடபகுதியிலுள்ள பல ஆஸ்பத்திரிகளிலும் கடந்த சில தினங்களாக நிலவிவரும் மருந்துத் தட்டுப்பாடு காரணமாக பெருமளவில் நோயாளர்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

யாழ்ப்பாணம், காங்கேசன் துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் மருந்துக் கட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. ஊசி மருந்துகளுக்கும், மாத்திரைகளுக்கும் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினுல் முக்கியமான நோயாளர்களுக்கே சிகிச்சை அளிக்க முடியாதநிலை உருவாகி உள்ளதாகத் தெரிகிறது.

ஆஸ்பத்திரிகளில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டுக்கு கொழும்பிலிருந்து உரியகாலத்தில் மருந்துகள் வந்து சேராமையே காரணமெனச் சொல்லப்படுகின்றது. மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை எடுக்கும்படி சுகாதார இலாகாவிற்கு பல தமிழ் எம். பிக்கள் முறையிட்டுள்ளனர்

---

# மாதர் கழக கட்டட திறப்புவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

வட்டுக்கோட்டை சிவன் மாதர்கழகத்தின் புதிய கட்டடத்தை வரும் திங்கட்கிழமை மாலை 6-30 மணியளவில் வைத்திய கலாநிதி திரு. அ. க. குமாரசுவாமி திறந்துவைப்பார். பின்னர் அவர் தலைமையில் கழகத்தின் 6-வது ஆண்டுவிழாவும் நடைபெறும். இந்த விழாவில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் முதலியார் சின்னத்தம்பி உட்பட பலர் கலந்து கொள்வார்கள். நடனம் நாடகம் போன்ற கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

---

# டிராக்டர் உபகரண தொழிற்சாலை

## கிளிநொச்சியில் நிறுவப்படலாம்

நல்லூர், வெள்ளி

தமிழ்ப் பகுதிகளில் பொருளாதார அபிவிருத்திக்காக பல பிரமுகர்கள் எழுத்து வரும் முயற்சிகளில் டிராக்டர் உபகரணங்கள் தொழிற்சாலை முக்கிய இடம் பெறுமென அறியப்படுகிறது. கிளிநொச்சியில் இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

நவீனமான முறையில் விவசாயத் தொழிலில் அபிவிருத்தி ஏற்படுத்துவதற்கான வகையில் உபயோகப்படுத்தும் "டிராக்டர்களுக்கு"ரிய உபகரணங்களைத் தயாரிப்பதில் இத் தொழிற்சாலை ஈடுபடும்.

இத்தொழிற்சாலையில் பயிற்சி பெற தமிழ்ப் பகுதிகளிலுள்ள இளைஞர்கள் சேர்க்கப்பட்டுவருகின்றனர். மிக விரைவில் இத்தொழிற்சாலை செயல்படுமெனத் தெரிகிறது

---

# சுகாதாரவிழா

கோப்பாய், புதன்

அகில இலங்கை மக்கள் சுகாதாரவார விழா கோப்பாய் பகுதிக்கான அங்குரார்ப்பணக் கூட்டம் கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் எம். பி. திரு. மு. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

---


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனி வீதி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை)

விஜிதா (ஹட்டன்) மொடேர்ன் (பதுளை) வெம்பிளி (கண்டி)

கல்யாணி (நாவலப்பிட்டி)




எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி

எம். ஆர் ராதா—டி. ஆர். ராஜகுமாரி

மற்றும் பலர் நடித்த

பெரிய இடத்துப் பெண்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலகத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.